**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 441/2022 P.W. 2/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. அனிஷா பெலிக்சி | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.02.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வங்கியில் பணிச் செய்து வருகிறேன். 28.02.2021ம் தேதி நள்ளிரவு 12.00 மணியளவில் எங்கள் வீட்டின் பின்பக்க கதவை உடைத்து வீட்டிற்குள் இருந்த டி.வி. மிக்சி, டார்ச் லைட், அயன்பாக்ஸ், எமர்ஜென்சி லைட், உண்டியல் பணம் ரூபாய் 2,000/- ஆகியவற்றை யாரோ திருடிச் சென்றுவிட்டார்கள். சம்பவம் சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் மனுக்கொடுத்தேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் திருட்டுப்போன பொருட்கள் கிடைத்துவிட்டதாக போலீசார் கூறினார்கள். அவற்றை திருப்பி நான் பெறவில்லை. **அவை அ. சா.பொ. 1 முதல் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.